REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 163

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 6உ திங்கள் (21—12—53) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 7உ செவ்வாய் (22—12—53)

சி. ஆர்.-க்கு தாய்மார் அறைகூவல்!

தூத்துக்குடி வழக்கிற்கு திராவிடப் பெண்டிர் கொடுத்தப் பெருநிதி!

பொதுச் செயலாளருக்கும் சிறை சென்று மீண்ட தம்பிமார்களுக்கும் வீராங்கனைகளின் வாழ்த்தும்—வரவேற்பும்

சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடந்த கூட்டத்தின் முழு விவரம்

சென்னை, டிச. 21—

சிறைசென்று மீண்ட தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன், மு. கருணாநிதி முதலிய தி. மு. கழகத் தலைவர்களுக்கு சென்னை தாய்மார்கள் சார்பாக நேற்று காலை 10 மணிக்கு சென்னை மெமோரியல் மண்டபத்தில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் அமைப்பாளர் தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் டாக்டர் தர்மாம்பாள் அவர்களை தலைமை தாங்கும்படி முன்மொழிந்தார். தோழியர் அலமேலு அப்பாதுரை வழிமொழிந்தார்.

டாக்டர் தர்மாம்பாள் அவர்கள், தனது தலைமையில் குறிப்பிட்டதாவது:—

"எனக்கு, என் மக்களைப் பாராட்ட சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன். சிறை சென்று வந்துள்ள என் மக்களிடம் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதை நான் பார்த்துவிட வேண்டும். அதற்காக அண்ணாதுரை என்ன கட்டளையிட்டாலும், என்னுடைய 63-வது வயதிலும், நான் அதை நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன்.'

அதன்பின் தோழியர்கள் மலர்முகத்தம்மாள், அருண்மொழி பூங்கோதை, செல்வக்கண்ணம்மாள் ஆகியோர் பேசிய பின், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் தலைவர்களுக்கு வாழ்த்திதழ் படித்துக் கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து சித்ரா என்ற சிறுமி தலைவர்களுக்கு கைத்தறி கைக்குட்டைகளை வழங்கியது.

★

தி. மு. கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளர் தோழர் ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ. சட்டசபை நிலவரத்தை விளக்கிச் சொன்னார்.

★

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசியதாவது:—

"சிறை சென்று மீண்ட தலைவர்களை, நான், சிறை செல்லாதவன் என்ற முறையில் வரவேற்கிறேன்—பாராட்டுகிறேன். தாய்மார்கள் அளிக்கின்ற இந்த வரவேற்பு எனக்கு பிரான்ஸ் புரட்சியின் வரலாற்றை நினைவுறுத்துகிறது. திராவிடர்கள், தன்மானமுள்ளவர்கள்—உடலிலே ஒரு துளிரத்தம் உள்ள வரையில் சுயமரியாதையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதை யாராலும் உணரும் வகையில் இந்தப் பாராட்டுக்கூட்டம் அமைந்திருக்கிறது," என்றார்.

★

தோழர் க. அன்பழகன் பேசியதாவது:—

"தோழர் சிற்றரசைப் போலவே, நானும் சிறைக்குச் செல்லாதவன் என்ற முறையில் சிறை சென்று மீண்ட தலைவர்களை வரவேற்கிறேன். என்னைக்காவது நான் சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால்—அப்படி ஏற்படாது—அண்ணாதுரைக்கு இளைஞர்கள் பஞ்சம் என்றும் ஏற்படப் போவதில்லை—வேறு எதைக்கொண்டாவது நான், போராட்டங்களில் கலந்துகொள்ள நேர்ந்தால், அதற்கு நான் தயார் என்று உங்கள் முன்னிலையில் உறுதியளிக்கிறேன். பெண்ணி

(3-ம் பக்கம் பார்க்க)

கே. ஏ. மதியழகன்

தி. மு கழக துணைச் செயலாளர் தோழர் கே. ஏ மதியழகன் அவர்கள் கடந்த ஒரு வார காலமாக தனது சொந்த ஊர் கணியூரில் தங்கியிருக்கிறார். இந்த வார இறுதியில் சென்னை வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

வரலாறற்ற நாடு வாழ்வு பெறுவது முடியாது!

திராவிடத்திற்கு வகையான வரலாறு உண்டு; எனவே தான் விடுதலைக் குரல் எழுப்புகிறது!

தாய்மார்கள் பாராட்டுக்கு தி. மு. கழகத் துணைச் செயலாளர் நெடுஞ்செழியன் நன்றியுரை

சென்னை, டிச. 21—

"கணவனைச் சிறைக்கு அனுப்ப மறுத்து, பெண்கள் கண்ணீர் வடிக்கும் காலம் மறைந்து, பெண்களே போராட்டத்தில் குதிக்கும் அளவுக்கு நம் கொள்கைகள் வலுப்பெற்றிருக்கின்றன; காரணம், நம் கொள்கைகள் நேர்மையானவை; நியாயத்தின் அடிப்படையில் தோன்றியவை."

"வீழ்ச்சியுற்ற நாடு வெற்றிபெற அந்த நாட்டின் கடந்த கால வரலாறு இன்றியமையாதனவாகும். வரலாறு இல்லாத நாடு, என்றும் எழுச்சி பெறமுடியாது. திராவிடத்திற்கு வரலாறு இருக்கிறது—எனவேதான், அது தன் எழுச்சிக்குப் போராடுகிறது."

"எப்போதுமே இரு மொழி ஒரே இடத்தில் தோன்றியிருக்க முடியாது. தமிழ் மொழியின் அரசியல் முறை—குடியாட்சி; வடமொழியின் அரசியல் முறை—நாடு அரசனுக்குச் சொந்தம்; இதனால்தான், அரிச்சந்திரன், நாட்டையும், மனைவியையும் விற்றிருக்கிறான். பஞ்சபாண்டவர்கள் நாட்டை சூதாட்டத்தில் அடகு வைத்திருக்கின்றனர். தமிழ் நாட்டில் அப்படி ஒன்றுகூட இல்லை. வேண்டுமானால் 'வடக்கிருத்தல்' என்ற முறைப்படி தமிழ் மன்னர்கள் உண்ணா நோன்பிருந்து தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர்."

(.-ம் பக்கம் பார்க்கவும்)

"இந்த எதிர்ப்புகள் நமது இலட்சிய வெற்றியைக் காட்டும் அறிகுறி"

"நமது போராட்டம் பதவிக்கல்ல-தாயக விடுதலைக்கே"

தாய்மார் வாழ்த்துக்கு நடராசன் நன்றி

சென்னை, டிச. 21—

"நமது போராட்டங்களும், இலட்சியங்களும் வீணாகிவிடவில்லை. நம்மைத் தூற்றிய மாற்றுக் கட்சித் தலைவர்களெல்லாம் இப்போது நம்மைப் பற்றியும், நமது கொள்கைகளைப் பற்றியும் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். சர். சி. பி.-யிலிருந்து, கீழ்ப்பாக்கம் ரா. கி. வரை பேசி வருகிறார்கள்."

"நமக்கு விரோதிகள் பார்ப்பனர்களல்ல; பார்ப்பனீயம் தான். நம் கழகத்திற்கு ஏற்படும் இப்போராட்ட எதிர்ப்புகளெல்லாம், விரைவிலே நாம் இன்பத் திராவிடம் காணப்போகிறோம் என்பதற்கு அறிகுறிதான். தி. மு. கழகம் அரசியலில் இறங்கிப் பணியாற்றுவது, பதவிக்காக அல்ல; தாயகத்தின் விடுதலைக்குத்தான். நமது விடுதலைக் கோரிக்கையை யாரும் எதிர்க்க முடியாது—வரலாறு அறிந்தவர்கள் மறுக்க மாட்டார்கள். நாம் நமது இலட்சியப் போராட்டத்திலே வெற்றி பெற்றுத்தான் தீருவோம்."

—என்று, நேற்று நடைபெற்ற தாய்மார்கள் வரவேற்பில் தோழர் என். வி. நடராசன் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இதை நான் வரவேற்புக் கூட்டமாகக் கருதவில்லை. 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது மாதிரியே இந்தக் கூட்டமும் அமைந்துள்ளது.

"தாய்மார்களின் இம்முயற்சி, தி. மு. கழக எதிர்காலப் போராட்டங்களில் பங்கு கொள்ள அவர்கள் காட்டும் ஆர்வத்தைத்தான் காட்டுகிறது.

"எங்களுக்குச் சிறை வாழ்வு தந்த ஆச்சாரியாருக்கு நாங்கள் ஒருவகையில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பொது வாழ்விலே இறங்கியுள்ள எங்களிடம் காணப்பட்ட சில குறைகளை சிந்தித்துச் சிந்தித்து நீக்கிக் கொள்ள, மூன்று மாத ஓய்வு தந்தவர் ஆச்சாரியார்தானே!"

கைத்தறி பை ரூ 10!

19—12—53 இரவு பூந்தமல்லி நாடகத்தின்போது தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு ஒரு கைத்தறித் துணியாலான பை ஒன்று அளிக்கப்பட்டது. அந்தப் பையை ஏலம் விட்டதில் நண்பர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் ரூ. 10 கொடுத்து அதை வாங்கினார்.

வட்டித் தொழிலுக்கு வரம்பு

சென்னை, டிச. 20—

வட்டித் தொழில் சில விதிமுறைகளின் கீழ் கட்டுப்படுத்துவதற்கு சர்க்கார் சட்டமியற்ற உத்தேசித்திருக்கிறார்களென்று சென்னை அசெம்பிளியில் ரெவின்யூ மந்திரி தெரிவித்தார். சென்னையிலுள்ள அடகுக் கடைகளுக்கு சட்டமிருக்கிறது. ஆனால் வட்டிக் கடைகளுக்கில்லை.

சைகிள் உற்பத்திக் கவுன்சில்

புது டெல்லி, டிச. 20—

சைக்கிள் உற்பத்தித் தொழில் சம்பந்தமாக இந்திய சர்க்கார் ஒரு அபிவிருத்திக் கவுன்சில் ஏற்படுத்தியுள்ளனர். அதன் பணியின் விளக்கம் சர்க்கார் குறிப்பேட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் 12 பேர் உறுப்பினர்கள்

நம் நாடு

சென்னை 21—12—53 திங்கள்

நிதி அமைச்சர் குதர்க்கம்

கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள கல்வித் திட்டத்தை, கட்சி பேதமின்றி, ஜாதிப் பாகுபாடு கருதாமல், கல்விக் கண் ஒன்றை மட்டுமே கொண்டு கிளம்பிய எதிர்ப்பைப்போல், ஆச்சாரியாரின் வேறு எந்தத் திட்டத்திற்கும் ஏற்பட்டது கிடையாது.

நமது தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் பொதுவாகக் கல்வி நோக்குடனும், குறிப்பாகத் திராவிடப் பெருங்குடி மக்களின் எதிர்காலக் கல்வியின் தரத்தைக் கருதியும் கொண்டும், புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தை உடனடியாகத் தொலைக்க வேண்டும் என்று தீவிரமாகப் போராடினோம். மற்றவர்களைப்போல் சொல்லலங்காரத்தோடு நின்றுவிடாமல், பொதுமக்கள் எதிர்ப்பைப் புயல்வேகப் பரவலாக்குவதற்கும், உருவாக்குவதற்கும் நமது தி. மு. கழகம், அறப்போர்க்களத்திலும் அமைதியான மறியல் போரும் தொடுத்தது.

நமது கழக முன்னணி வீரர்களின் பிரசாரமும், அமைதியான நேரடி நடவடிக்கையும், புதிய கல்வித் திட்டத்திற்கு எதிராக, எதிர்ப்புச் சக்தியை பல மடங்காகப் பெருக்கிற்று என்று கூறுவது மிகையாகாது. புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு அணியில் தங்களுக்கும் இடமில்லாமற் போனால், வாக்காளர்களின் சிற்றத்திற்கும், பலத்த அதிருப்திக்கும் ஆளாகவேண்டி இருக்குமே என்ற அச்சத்தைக் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கும் ஊட்டியது நமது தி. மு. கழக அறப் போரின் விளைவு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

திராவிட மக்களின் எதிர்காலக் கல்வி நலனை மனதில் கொண்டு, புதிய திட்டத்தை இயல்பாகவே எதிர்த்த பல நல்லவர்களும் உண்டு. அத்தகைய நல்லவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் உழைப்பாளர் கட்சியைச் சார்ந்தவர்களும், முன்னாள் சட்ட சபை முன்னேற்றக் கட்சியினரும், இந்நாள் திராவிட சட்ட சபைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்டுப் பாராட்டத் தகுந்தவர்கள் ஆவார்கள். எதிர்ப்புப் பட்டியலில் உள்ள மற்றவர்களின் போக்கு, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நினைப்பில் விரித்த வலைவிரிப்பேயாகும் என்பதுதான் உண்மை. நிற்க,

திட்டத்தின் விளைவாக ஏற்படும் கேடுகளுக்குக் கிளம்பிய எதிர்ப்பின் வேகத்தை, புதிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஆச்சாரியார் மேற்கொண்ட முறைகேடு, மேலும் கூடுதலாக்கிற்று. திட்டத்தின் நோக்கமான கல்வி குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு மட்டுமே உரிமையுடையது அல்ல. நாட்டையே பாதிக்கக்கூடிய ஒரு பொது விஷயமாகும். இத்தகைய பொது விஷயங்களில் சட்ட சபையில் உள்ள மாற்றுக் கட்சியினர் கருத்தையும் அறிந்துதான் ஆச்சாரியார் எதையும் செய்திருக்க வேண்டும். ஆச்சாரியார் புதிய கல்வித் திட்ட விஷயத்திலும், மற்ற காரியங்களில் நடந்துகொள்வது போலவே, எதேச்சாதிகார ஆணவப் போக்கிலே நடந்துகொண்டார்.

மாற்றுக் கட்சியினரைக் கலந்துகொள்ள வேண்டியது ஒரு பெரும்பான்மைக் கட்சியின் பிரதிநிதிக்கு, ஜனநாயகக் கோட்பாட்டின்படி அவசியமில்லை என்று மக்களாட்சி முறைக்குப் புதிய தத்துவார்த்தம் ஆச்சாரியார் கொண்டிருப்பவராக இருந்தாலும், சொந்தக் கட்சி சட்ட சபை உறுப்பினர்களையாவது கலந்துகொண்டு, புதிய திட்டத்தை அவர் கொண்டுவந்திருக்க வேண்டும்! 'இவர்களை நான் ஏன் கேட்க வேண்டும்? இவர்கள் விருப்பத்தைப் பெற்று நான் பிரதமர் ஆனேன்? டெல்லி மேலிடம் கோலெடுத்தது, இவைகள் வாலைச் சுருட்டிக்கொண்டன? எனவே, இதுகளை நான் எதற்குக் கேட்பது?' என்ற அலட்சிய நினைப்போடு காங்கிரஸ் கட்சியினரின் ஒப்புதலையும் ஆச்சாரியார் புறக்கணித்துவிட்டார்.

சட்ட சபை உறுப்பினர்களை வெறும் கடுபிடிகள் என்று மதித்து, அவர்களின் கருத்தறிய முயலவில்லையானாலும், திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு முன்பாக, தினப்படி முகத்தில் விழித்துத் தீரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிற அமைச்சர் குழுவையாவது ஆச்சாரியார் முன்கூட்டியே கலந்துகொண்டு, செயலில் இறங்கி இருக்க வேண்டும். அந்த மனிதப் பண்பும் ஆச்சாரியாருக்கு இல்லாமல் போய்விட்டது. எல்லாப் படியினரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டதுபோலவே, அமைச்சர்களுக்குப் பணிந்தவனே பிரதானம் என்று கருதிக்கொண்டோ என்னவோ, மற்ற அமைச்சர்களையும் சாதாரண 'டபேதார்'களாக ஆச்சாரியார் மதித்து நடந்துகொண்டார்

கனம் ஆச்சாரியாரின் சகல தீமைகளுக்கும் பிறப்பிடமான புதிய கல்வித் திட்டம் பிறந்த முறைகேடான கதை இதுதான். ஒரு தனி மனிதனின் ஆசாபாசத்திற்கு, ஜாதி வெறியாட்டத்திற்கு, வரலாறு கண்ட நாட்டு மக்களின் எதிர்காலம் உள்ளாக்கப்பட்டது; அவதிக்கு ஆளாக்கப்பட்டும் கிடக்கிறது. நிற்க,

எந்தக் கோட்பாட்டின்படி இயங்குபவர்களாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியினர் என்பதற்காக அவர்களுக்குத் தன்மான உணர்ச்சி இல்லாமல் போகுமா, என்ன?

புரட்சிகரமான சமுதாயப் பொருளாதார ஒப்பந்தத்தை அவர்கள் விரும்பி வரவேற்கவில்லையானாலும், வேகமாக மாறி வரும் மக்களின் மனப்போக்கு அவர்களுடைய நடவடிக்கைகளையும், அவர்கள் விரும்பினாலும், விரும்பாமல் போனாலும், மாற்றிக்கொள்ள வேண்டிய நெருக்கடியை அவர்களிடை உண்டாக்கத்தானே உண்டாக்கும்? இந்த இயற்கை நியதியை அவர்களால் மட்டும் தட்டிக் கழிக்க முடியுமா? எனவே, கல்வித் திட்ட எதிர்ப்பு அணியில் அவர்களில் சிலர் வெளிப்படையாகவும், சிலர் மறைமுகமாகவும் இடம் பிடித்துக் கொண்டனர். அவர்களில், மன மாற்றம் கண்டு மகிழாதார், ஆச்சாரியார் அமைச்சர் குழுவில் இருந்தால் இருக்கலாமேயல்லாது, நாட்டு மக்களில் ஒருவரும் இருக்க முடியாது என்பது நிச்சயம்.

தனது மனக்குரங்கு சொன்னபடியே புதிய கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த பல கிழமை கழித்து, அந்தத் திட்டத்தை உறுப்பினர் ஆராய வேண்டும் என்று, ஜூலை திங்கள் கடைசியில், அன்றைய கல்வி அமைச்சர் ஒரு தீர்மானத்தை அமைச்சர் குழு சார்பில் சட்டசபை முன் வைத்தார்.

'மாற்றப்பட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்,' என்ற அமைச்சர் குழு பிரேரபணைக்கு, 'திட்டத்தைக் கைவிட (Drop) வேண்டும்,' என்ற ஒரு திருத்தம் எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்டது. அந்தத் திருத்தத்தை வாக்கெடுப்புக்கு விட்டதில், திருத்தத்திற்குச் சாதகமாக 138 வாக்குகளும், சர்க்காரின் மூலத் தீர்மானத்திற்குச் சாதகமாக 138 வாக்குகளும் கிடைத்தன. சட்ட சபைத் தலைவர் தனது மாற்று வாக்கைக் கொடுத்து, சர்க்காரை, குடை கவிழ்வதிலிருந்து காப்பாற்றி விட்டார்.

தலைவர் தனது மாற்று வாக்கைக் கொடுத்து, சர்க்கார் தீர்மானத்தை நிறைவேறச் செய்ததினால், மூலத் தீர்மானத்தை மறுமுறையும் உறுப்பினர் ஆலோசனைக்குக் கொண்டுவர சட்ட சபைத் தலைவர், வாய்ப்பளித்தார்.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு உழைப்பாளர் கட்சியைச் சார்ந்த தோழர் கே. ஆர். விஸ்வநாதம் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டுவந்தார். அந்தத் திருத்தம் வருமாறு;—

"திட்டம் நிறுத்திவைக்கப்பட வேண்டும்; அதிகாரிகளையும், அதிகாரப் பற்றற்றவர்களையும் கொண்ட நிபுணர் குழுவிடம் விடவேண்டும்,"

'திட்டம் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்' என்ற திருத்தத்திற்கு 139 வாக்குகளும், பாதகமாக 137 வாக்குகளும் கிடைத்தன எனவே, திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும் என்ற திருத்தம் நிறைவேறிற்று. சர்க்காரின் மூலத் தீர்மானம் தோற்றது.

இச்சட்டசபை தீர்ப்புப்பற்றி, ஆச்சாரியார் அமைச்சர் குழு பதவியைவிட்டு விலகவேண்டும் என்று எதிர்ப்பாளர் வாதிட்டதும், அதற்கு ஆச்சாரியார் 'தீர்மானம் வெறும் சிபார்சு' என்று கூறியதும் பழைய கதை.

சட்டசபையிலேயே 'திட்டத்தை நிறுத்தி வை' என்று சட்டசபையில் நிறவேறிய தீர்மானத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் சட்டசபையில் வற்புறுத்தினார்கள்.

அப்படி வற்புறுத்தினவர்களில் ஒரு உறுப்பினர், 'சட்ட சபை நிறைவேற்றியத் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர, கல்வித் துறையினருக்கு, புதிய தொடக்கக் கல்வியை விலக்கி (Suspend) வைக்குமாறு கட்டளைப் பிறப்பித்தாகிவிட்டதா' என்று சர்க்காரைக் கேட்டிருக்கிறார். அதற்கு பதில் கூறிய ஆச்சாரியார், 'புதிய திட்டப்படி தொடக்கப் பள்ளிகளை எல்லாம் மாற்றி அமைத்துத் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன; இந்த நேரத்தில் பள்ளிக்கூட நடைமுறையில் குறுக்கிட்டு நிறுத்துவதென்பது மிகமிக விரும்பத்தகாதது' என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டசபை தீர்மானத்துக்கு மதிப்பளித்து புதிய கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்காமல் அமைச்சர் ஆச்சாரியார் பிடிவாதம் காட்டி வருவதை அனைவரும் நன்கு அறிவர்.

இரண்டு தினங்களுக்கு முன்பு சட்ட சபையில் புதிய சட்ட சபை திராவிடக் கட்சித் தலைவர் சுயம்பிரகாசம் அவர்கள், புதிய கல்வித் திட்டத்தில் சட்ட சபை தீர்ப்புக்கு மதிப்பளிக்க மறுத்ததின் மூலம், ஆச்சாரியார் சர்க்காரில் சட்ட சபை இருப்பதும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதான் என்று மனம் நொந்து பேசி இருக்கிறார்.

இது பற்றி அமைச்சர் குழு சார்பில் பதில் கூறப் புகுந்த நிதி அமைச்சர் சுப்ரமணியம் பின்வருமாறு கூறியுள்ளார்;

"புதிய கல்வித் திட்டத்தைச் சிலர் ஆட்சேபித்துப் பேசினர். அசெம்பிளி நிறைவேற்றிய தீர்மானத்துக்கு சர்க்கார் மதிப்பு வைக்கவில்லை என்றும், அதற்கு மாறாக நடந்ததாயும், திரு. சுயம்பிரகாசம் கூறினார். அசெம்பிளி நிறைவேற்றிய தீர்மான வாசகத்தை கவனிக்குமாறு அவருக்குக் கூறுகிறேன். அசெம்பிளி தீர்மானம் நிறைவேறிய சமயத்தில், திட்டம் ஏற்கனவேயே அமுல் செய்யப்பட்டிருந்தது. திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும் என்பதே தீர்மானம். அதாவது இருக்கிற நிலையில் திட்டம் நிறுத்திவைக்கப்பட வேண்டும். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதே தீர்மானத்தின் கருத்து. திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று தீர்மானம் கூறவில்லை. அப்போதிருந்த நிலைமையில் திட்டம் அமுல் நடக்கிறதே தவிர, மேற்கொண்டு விஸ்தரிக்கப்படவில்லை. ஆகவே, தீர்மானத்தை மீறி நடந்ததாகப் புகார் கூறுவது சரியல்ல. தீர்மானத்தின் பிரகாரமே (அது சிபாரிசுதான் என்றபோதிலும்) திட்டத்தைப் பரிசிலனை செய்ய ஒரு கமிட்டியை சர்க்கார் அமைத்தது. அது சமீபத்தில் யாதாஸ்தை சமர்ப்பித்தது. அதை சர்க்கார் பரிசீலித்து வருகின்றனர்."

திட்டத்தை 'நிறுத்தி' வைக்கவேண்டும் என்று சட்டசபை தீர்மானித்தபடி புதிய திட்டத்தை மேலும் நடைமுறையில் இல்லாத இடங்களில் 'புகுத்தவில்லை' என்று, 'நிறுத்து (Stay)' என்ற சொல்லுக்கு புதிய தத்துவார்த்தம் கூறக் கிளம்பியிருக்கிறார்.

கள்ள மார்க்கெட் கள்ள வணிகரிடம் வக்காலத்து வாங்கிக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு வார்த்தைக்கு அகராதிப் பொருள் காட்டி, ஒரு நீதி மன்றத்தில் வாதிடுவதாகத்தான், சட்ட சபையையும் நிதி அமைச்சர் கருதிக் கொண்டு இருப்பதாகவே அவர் செயல் காட்டுகிறது. மந்திரியாக ஆக்கப்படுவதற்குமுன் அவருக்கு இருந்த பழக்கம், மந்திரியான பின்னரும் அவரை விட்டுத் தொலையக் காணோம்.

முன்னர் சட்டசபையில் சர்க்கார் சார்பில் கொண்டு வரப்பட்ட மூலத் தீர்மானமோ புதிய திட்டத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது. அதற்குக் கொண்டு வரப்பட்ட திருத்தமோ 'திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும்' என்பது. சிறந்த 'கிரிமினல்' வழக்கறிஞர் என்று கூறப்படுகிற அமைச்சர் ஆச்சாரியார் அப்பொழுது கூறாத பதிலை ஒரு சொல்லைப் பற்றிக் கொண்டு சித்து விளையாட்டம்பேசக் கிளம்பியதை, அவருடைய தாசானுதாசரான நிதி அமைச்சர் இப்பொழுது உளறக் கிளம்பி இருக்கிறார். இது வெறும் குதர்க்கமேயாகும். இந்தக் குயுக்தியாலும், குதர்க்கத்தாலும், நிதி அமைச்சருக்கு இருக்கிற கொஞ்சநஞ்சம் மதிப்பும், தொலைந்து போகுமே அல்லாது, சட்ட சபையை மதிக்காது தூய்மையாகவும், மக்களாட்சி முறையை அலட்சியப்படுத்தியும் நடக்கும் ஆச்சாரியாரின் அசம்பாவமும், மக்கள் கண் முன் மறைக்கப்பட்டுவிட முடியாது. இந்தச் சாதாரண உலகியல் அறிவு ... தவர் நமக்கு நிதி அமைச்சராக இருப்பது வெட்கக்கேடுதான். என்று தொலையுமோ இந்தப் பீடை?

அமைச்சர் அவையிலிருந்து தான் தள்ளப்பட்டதும், கள்ள மார்க்கெட் கட்சிக்காரரின் மன்னிக்க முடியாத குற்றத்தை, குறிப்பிட்ட ஒரு சொல்லுக்கு அல்லது வாசகத்துக்கு அகராதிப் பொருள் விரித்து, எப்படி வெற்றி பெறுவது என்பதற்கான ஒரு ஒத்திகைக் கூடமாக சட்ட சபையை, நிதி அமைச்சர் எண்ணிக் கொண்டு இருக்கிறார் போலும்! இல்லையானால், இப்படி, சொற்களுக்கு வலிந்து பொருள் கொண்டு, குதர்க்கம் பேசத் துணிந்து, மூக்கு உடைபட மாட்டார், நிதி அமைச்சர்!

பட்டிவீரன்பட்டியில்

பொதுக் கூட்டம்

27-12-53 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், தோழர் எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தோழியர்கள் அருண்மொழி பூங்கோதை, தோழர் அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசுவார். சுற்றுவட்டாரத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வந்து கூட்டத்தைச் சிறப்பிக்குமாறும், தூத்துக்குடி நிதிக்குப் பேருதவி செய்யுமாறும் வேண்டுகிறோம் என்று, செயலாளர் கே. நடராசன் அவர்கள் அறிவிக்கிறார்.

'தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்'

—[o]—

'பிற மொழிக் கலப்பால் வளமுறாது! மாசுக்கெடும்'

பல கருத்தினர் ஒருமித்துக் கிளப்பிய இதய ஒலி

தோழர் கஜபதி தலைமையில் தமிழ் முழக்கம்

"எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்க்கும் பெருமை தமிழ் மொழிக்குத்தான் உண்டு. இந்தக் கூட்டு முயற்சி, தமிழ் ஆட்சிமொழியாகும் என்பதற்கு அறிகுறி. தமிழன் இன்றைய இழிநிலைக்குக் காரணம், வடநாட்டவரின் ஆதிக்கம் தான். சட்ட மன்றத்தில் மட்டும், தமிழ் பேசப்பட்டால் போதாது; நீதிமன்றம், சர்க்கார் காரியாலயங்கள் அனைத்திலும், தமிழ் ஆட்சி பெறவேண்டும். குறிப்பாக ரயில் நிலையங்களில் இந்தி ஆதிக்கம் ஒழிந்து, தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் நாளையே இம்முயற்சி வெற்றி பெறும்; ஆச்சாரியாருக்கு எதிராக கையொப்பமிட்ட 85 பேர்கள் ஆதரவு தந்தாலே இம்முயற்சி வெற்றிபெறும் அதில் சந்தேகமில்லை."

—ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,

★

"மூவேந்தர்கள் ஆண்டார்கள்—அப்போது, 'வணக்கம்' என்ற சொல் நிலவி வந்தது; ஆரியம் வந்தபின் 'வணக்கம்' போய் 'நமஸ்காரம்' வந்தது; அதன்பின், நாயக்கர் ஆட்சியில் 'அடியேன் தாசானு தாசர்கள்' என வழங்கிற்று; நவாப், டில்லி பாதுஷா காலத்தில் 'சலாம் ஆலேகும் பாய்' ஆயிற்று; அதற்குப் பின்னர் வெள்ளையர் வந்தனர்—அப்போது எங்கு பார்த்தாலும், 'குட்மார்னிங்' ஆக இருந்தது; இப்போது வடவர் ஆட்சி நடக்கிறது—ஆகையால் 'ஜேய் ஹிந்த்' ஒலிக்கிறது இனி சைனாக்காரர்கள் வந்தால் 'சிங் சங்' என்பார்கள், ரஷ்யர்கள் வந்தால் 'டிக் டக்' என்பார்கள். இனி யார் யார் வருவார்களோ, தமிழர்கள் என்னென்ன போடுவார்களோ நாம் அறியோம்."

"எந்த நாட்டிலும் அந்த நாட்டு மொழிக்கு ஆதரவு தேடும் மாநாடு நடந்ததில்லை. இந்தத் தமிழ் நாட்டில் இந்நிலை ஏற்பட்டிருப்பது வெட்கப்படக்கூடியதே யாகும். இங்கே கூடியிருக்கிறவர்கள் எந்தக் கட்சிக்காரரானாலும், அவர்களை முதலில் தன் தாய் நாட்டையும், வளர்ந்த மொழியையும் வலுப்படுத்திக் கொள்ளும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்."

—கி. ஆ. பெ. விசுவநாதம்.

சென்னை, டிச. 21—நேற்று மாலை 3-மணிக்கு அண்ணாமலை மன்றத்தில் தமிழ் ஆட்சி மொழி மாநாடு நடைபெற்றது.

தோழர் சொ. அமிர்தகணேசன் தனது வரவேற்பு உரையில், "தமிழ் ஆட்சி மொழியானால், நாடு நலம் பெறும்; தமிழுக்கு அத்தகு தகுதியும் உண்டு," என்றார்.

திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் என். சுயம்பிரகாசம், அவர்களுரையாற்றுகையில் "மனிதனுக்கு மொழி தன் கருத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் கருவி; நம் நாடு, நமதான பின்னர் அந்தந்த மக்கள் அந்தந்த மொழியை ஆட்சி மொழியாக்க விரும்புவது இயற்கை; தமிழ் மொழிக்கு அந்த வளமுண்டு" என்றார்.

தமிழ் மாநில தமிழ்ச் சங்க அமைச்சர் இ. மு. சுப்ரமணிய பிள்ளை அவர்கள், "தமிழ் மாநிலத்திலே, வேறு எந்த மொழியும் ஆட்சி மொழி ஆக முடியாது" என்ற உண்மையை விளக்கினார்.

பின்னர், தோழர் இ. மு. சுப்ரமணியப் பிள்ளை முன்மொழிய, கி. ஆ. பெ. விசுவநாதம் வழிமொழிய முன்னாள் நீதிபதி கஜபதி அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றினார்.

★

பின்னர் தோழர் கே. விநாயகம் அவர்கள் பேசியதாவது:-

"திராவிடர் என்ற முறையில் நாமெல்லாம் ஒன்று. 'திராவிடம்' அமைவதிலே நான் வேறுபாடான கருத்து கொண்டவனல்ல; ஆனால், சித்தூர் பகுதியிலே தமிழ் எல்லைப் போர் நடந்தபோது இன்றைக்கு வந்திருக்கும் தமிழர்களெல்லாம் எங்கு மறைந்திருந்தார்கள் என்றே தெரியவில்லை," என்று கூறினார்.

உடனே கூட்டத்திலிருந்த அனைவரும் எழுந்து, "விநாயகம் உன் பேச்சை நிறுத்து; இன்றேல், நீ இப்போது சொன்னதை வாபஸ் பெறு" என்று பேரொலி எழுப்பினர். மாநாட்டுத் தலைவரின் வேண்டுகோளின்படி தோழர் விநாயகம் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

★

தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"நாட்டு, ஆட்சியை அழித்த காலத்தில் மறைந்திருந்தவர்களெல்லாம் இப்போது வந்திருக்கிறார்கள்; புதிய கல்வித் திட்டத்திலும் அப்படியேதான்; நல்ல வேளை—தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற விஷயத்திலாவது, அவர்கள் ஒன்று சேர்ந்தார்களே என்பதற்கு நான் சந்தோஷப்படுகிறேன்; தமிழுக்கு இடையூறு செய்தவர்கள் ஆரியர்கள்தான்" என்று குறிப்பிட்டார்.

★

தோழர்கள் சுயம்பிரகாசம், ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, ஏ. சாம்பசிவ ரெட்டியார் எம். எல். ஏ., இலெ. இராகவனூர் எம். எல். ஏ., சச்சிதானந்தர், அரங்கசாமி எம். எல். ஏ., ஆகியோர் பேசினர்.

★

பின்னர், தீர்மானங்களை வாசித்து விட்டு, தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் பேசினார். அது போது, அவர் குறிப்பிட்டதாவது:—

ஆந்திரரும், கன்னடரும், கேரளத்தவரும் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் தமிழ்ப் பகுதியை எடுத்துக்கொண்டனர்;—ஆகவே, தமிழ்நாடு இப்போது ஒரு முண்டமாகவே இருக்கிறது என்று சொல்லலாம்; அதுவும் தமிழ்நாடல்ல —'எஞ்சிய சென்னை,' என்று சொல்லப்படுகிறது.

"தமிழர்கள், 'நமக்கு நாடு வேண்டாம்; யார் ஆண்டால் நமக்கென்ன; ஆளுகிறவர்கள் மொழியில், அவர்களுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டால் போதும்,' என்றிருக்கிறார்கள்" என்றும்.

தோழர்கள் கா. மு. ஷெரீப், சோம. இலக்குமணன், உமாபதி ஆகியோர் பேசினர்.

★

பின்னர் தோழர் க. அன்பழகன் பேசியதாவது:—

"தாய் மொழி ஆட்சியிலிருந்தால்தான், மக்கள் நல்வாழ்வு பெற முடியும். 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன?' என்ற கவலையற்ற தன்மை ஏற்பட்டதற்குக் காரணம் தமிழின் குறையல்ல; தமிழர்கள் இடைக்காலத்தில் ஒரு தூக்கம் தூங்கிவிட்டதுதான்! சட்ட மன்றத்திலுள்ளவர்கள் நற்றமிழர்களானால், தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கித் தீரவேண்டும்.

"தமிழை வளர்க்க நாம் வழிவகை காண முயலும் போது, தமிழ் அழியக் காரணமென்ன? தமிழுக்கு துரோகம் செய்தவர்கள் யார்? ஆலயத்திலிருந்த தமிழை ஓட்டியது யார்?—அவர்களுடைய மனம் முதலில் மாற வேண்டும்."

★

காங்கிரஸ் எம். எல். ஏ. கணபதி, நடிகர் டி. கே. சண்முகம், மயிலை சிவமுத்து, நாரண-துரைக்கண்ணன், ஆகியோர் பேசினர்.

★

பின்னர், துறவியார் அருணகிரிநாதர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இங்கு வந்து கலந்துகொள்ளாத எம். எல். ஏ.-க்களை, 'வடநாட்டு அடிவருடிகள்,' என்று கூடக் கூறுவேன், தமிழ் மொழியின் ஆதிக்கம் மேலும் மேலும் வளர தமிழரல்லாதவர்கள் மந்திரியாக வரக் கூடாது. தமிழ் மொழியை அவமதிக்கும் தமிழர்களின் பிறப்பிலே, ஏதோ களங்கம் இருக்கிறது என்றுதான் நான் சொல்வேன்; தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கும் முயற்சியில் எம். எல். ஏ.-க்கள் தோற்றால் அவர்கள், தங்கள் பதவியைத் துறந்துவிட வேண்டும்," என்று கூறினர்.

★

பின்னர், பன்மொழிப் புலவர் க. அப்பாதுரை அவர்கள் பேசியதாவது:—

"பல மொழிகளின் சார்பாகவும், பல கட்சிக்காரர்களின் சார்பாகவும் நான் இந்த முயற்சியை வரவேற்கிறேன். ஏனென்றால், நான் பல மொழிகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறேன்; பல கட்சிகளிலிருந்து பணியாற்றியிருக்கிறேன்.

"இந்த மாநாட்டின் இலட்சியம் வெற்றி பெற்றால் ஒரு பரணியும், தோற்றால் ஒரு சாபக்கேடான பாட்டும்

வரலாறற்ற நாடு வாழ்வு பெறுவது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தஞ்சையிலுள்ள ராவ்ஜீக்கள் மராட்டியம் பேசுகிறார்கள் என்றால்—அவர்கள் சிவாஜி காலத்திலோ, சாம்பாஜி காலத்திலோ இங்கே குடியேறினவர்கள்; அதே போலத்தான், ஆரியர்கள் இங்கே குடியேறினார்கள்; ஆகவே, அக்கிரகாரத்தில் மட்டுமே சமஸ்கிருதம் இருக்கிறது," என்று நேற்று காலை சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற தாய்மார்கள் வரவேற்புக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் விளக்கவுரை ஆற்றினார்.

தொடர்ந்து பேசும்போது அவர் குறிப்பிட்டதாவது:

"தாய்மார்கள் அளிக்கின்ற இந்த வரவேற்பால் நாங்கள் பெருமையும் பூரிப்பும் அடைகிறோம். இந்த வரவேற்பு, ஆட்சி பீடத்திற்கு அச்சத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை. இந்த வரவேற்பை நாங்கள் பட்ட துயருக்காகத் தரும் பாராட்டு என்று கூட நாங்கள் கருதவில்லை. கொள்கை மீதுள்ள பற்றுதலாலும், நம்பிக்கையாலுமே இந்தச் சிறப்பான வரவேற்பு நடத்தப்படுகிறது என நாங்கள் கருதுகிறோம்

பலர், நம் போராட்டத்தைக் கிண்டல் செய்தனர்; அவர்களுக்குப் பதில் தரும் வகையில இந்த வரவேற்புக் கூட்டம் ஏற்பாடாகியிருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

தி. மு. கழகம் தொடுத்த போராட்டங்களில் வெற்றி பெறுவிட்டது. இதில் ஐயப்பாடு எவருக்காவது தோன்றினால் அவர்கள் காலம் போக்கில் நமது வெற்றியை அறிந்துகொள்வார்கள்.

ஆரிய — திராவிடப் பிரச்சினை, 'வெள்ளைக்கார சரித்திர ஆசிரியர்களின் புரட்டு,' என்று கூறப்படுகிறது. சரித்திரமெழுதிய வெள்ளைக்காரர்கள் சமஸ்கிருதத்தைப் பார்த்துத்தான் எழுதினார்கள். கற்றினை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், சிலப்பதிகாரம் இவைகளைப் பார்த்து அல்ல; அகநானூறு, புறநானூறு இவைகளைப் பார்த்து அல்ல; ஆரிய — திராவிடப் பிரச்சினை குறித்து எத்தனையோ அய்யர், அய்யங்கார்கள் எழுதியுள்ளனர். ஆச்சாரியார் கூறுகிறார் — 'இதெல்லாம் கட்டுக்கதை' என்று; இதற்கு யார் காரணம்? ஆச்சாரியார் தான் காரணம்.

சி. ஆர்.-க்கு தாய்மார் அறைகூவல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை—தாய்க் குலத்தைச் சில பத்திரிகைகள் 'அவள்' என்று குறிப்பிட்டு வருகின்றன. அது. தமிழர் நாகரீகமல்ல; தமிழர் கலாசாரமுமல்ல; அது கண்டிக்கத்தக்கது" என்றார்.

அடுத்துத் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்களும் பேசினார்.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பேசியதாவது:—

தூத்துக்குடித் தோழர்களை கொலை, கொலை செய்தவர் களை நடத்துவதைப் போல, கைகளில் விலங்கிட்டு அழைத்து வருவதாக அங்கு போய் வந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிலையைப் பற்றி நான் பாட்டத்தீர்மானித்துள்ளேன்.

"இந்த மாநாட்டின் முயற்சியை எதிர்ப்பவன், 'தமிழ் இனத்தின் வைரி; மனித குலத்தின் வைரி,' என வரலாறு பின்னர் கூறும்."

★

அடுத்து, தோழர் என். வி. நடராசன் அவர்கள், பேசும் போது கூறியதாவது:—

"தமிழுக்குப் பாடுபட்டவர்களில், பெரியார் ராமசாமியையும், அண்ணாதுரையையும், தமிழகம் மறக்க முடியாது, தமிழுக்காக உயிர் நீத்த தாளமுத்து—நடராஜனை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த முயற்சியில், கட்சி மனப்பான்மையை விட்டு, தமிழர்களாகிய நாம் மொழியின் அடிப்படையில் ஒன்றுபட்டுப் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

"சட்டத்தைக் காட்டி, நம் எண்ணத்தைத் தோல்வியடையச் செய்ய எத்தனிப்பார்களேயானால், 'சட்டத்திற்காக மக்களல்ல; மக்களுக்காகத்தான் சட்டம்,' என்பதை நிலைநிறுத்த வேண்டும்," என்று கூறினார்.

போக்கி அவரவர்களின் மனைவி மக்களை பார்க்கும்படி செய்ய, அண்ணாதுரை அன்னை ஆச்சாரியார் அழைக்கு முன், நாம் ரூ 20,000 சேர்த்து விட வேண்டும்; பெண்கள், அவர்களுடைய பொன் நகைகளில் கொஞ்சம் கொடுத்தால் போதும்.— ஆயிரக் கணக்கில் திரண்டுவிடும்" என்றார்.

★

தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., பேசுகையில் கூறியதாவது:

"திராவிட சட்டசபைக் கட்சியிலுள்ளவர்கள் திராவிட நாடு பிரியவேண்டுமென்கின்றவர்கள்தான்; ஆனால், மந்திரிகைகளில் தவறுகச் செய்திகள் வந்துவிட்டன; எனவே, அண்ணாதுரை அவர்கள் திராவிட சட்டசபைக் கட்சிக்கு ஆதரவு தரவேண்டும்," என்றார்.

★

தோழர் இ. எல். இராகவன் எம். எல். ஏ., அவர்கள் பேசியதாவது:—

"திராவிட சட்டசபைக் கட்சி திராவிட இயக்கத்தின் ஜீவலட்சியத்தின் அடிப்படையில்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கட்சியை அண்ணாதுரை அவர்களின் அரும் பணிகளுக்கு சமர்ப்பிக்க இருக்கிறோம். திராவிட இயக்கத்திற்கு எதிராக நாங்கள் சட்டசபையில் எதுவும் செய்யப் போவதில்லை.

★

அடுத்து தோழியர் ஜோதி நாகராசன், மாரவதி அம்மையார், பன்மொழிப் புலவர் க. அப்பாதுரையார், சண்முகானந்த அடிகள் ஆகியோர், பேசிய பின், தோழர்கள் என். வி. நடராசன், நெடுஞ்செழியன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் பேசினர்.

★

தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களால் பொதுச் செயலாளரிடம் தாய்மார்கள் சார்பாக தூத்துக்குடி நிதிக்காக ரூ 901 கொடுக்கப்பட்டது.

ஆர்ச்சுனன் மன்றம் திறப்பு விழா

தோழர்கள் சம்பத், பெத்தாம்பாளையம் பழனிசாமி, சந்தானம், அப்பாவு கலந்துகொண்டனர்

காங்கயம், டிச. 18—

15—12—53ல், காங்கயம் காந்தி மைதானத்தில் தோழர் பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி தலைமையில், அர்ச்சுனன் மன்றத் திறப்பு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். அப்பாவு, என். ஆர். சந்தானம் ஆகியவர்கள் மன்ற அகசியம் குறித்துப் பேசினர்.

பின்னர் தோழர் ஈ. வே கி. சம்பத் அர்ச்சுனன் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தைப் பற்றியும், அர்ச்சுனன் மன்றம் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை பிரச்சாரம் செய்ய ஏற்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக் கூறியும், ஆரம்பக் கல்வி திட்டத்தை ஆச்சாரியார் சர்க்கார் புகுத்தியதின் விளைவு குறித்தும், சமீபத்தில் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில், தி. மு. கழக ஆதரவு பெற்ற தோழர் கே. ஜி. பழனிச்சாமி அவர்களின் வெற்றியே இந்தத் தொகுதி மக்கள் ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கண்டிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டிவிட்டதென்றும், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள் குறித்தும், கல்லக்குடி தோழர்கள் மீது போடப்பட்டிருக்கும் சதிவழக்கு நமது கழகத்தின் வலுவைச் சோதிக்க ஆச்சாரியார் சர்க்கார் எடுத்திருக்கும் ஒரு முயற்சி என்றும், எனவே கழகத் தோழர்கள் அத்து கல்லக்குடி சதிவழக்கு நிதிக்குத் தாராளமாக உதவ முன்வர வேண்டுமெனவும், பேசி முடித்தார்.

பின்னர் தோழர் கே. வி. முத்தியாலு அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

இரத்தினபுரியில் தி. மு. கழகம்

இலங்கை, டிச 15

தி. மு. க. (கிளை) அமைப்புக் குழு கூட்டம் இலங்கை இரத்தினபுரி, மெயின் வீதி, ... இலக்கக் கட்டிடத்தின் மேல் மாடியில் 4-12-53-ல், தோழர் எஸ். சுந்தரம் தலைமையில் கூடியது.

அவ்வமயம் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி தோழர்கள் எஸ். பொன்னம்பலம், முகையதீன், கே. ராசகோபால் (அன்னு தாசன்), ஆகியோர் கழகக் கொள்கைகளைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

நிரந்தர நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் பொறுப்பாளராக அன்னு தாசனும், உதவி பொறுப்பாளராக முகையதீன் அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரத்தினபுரி சுற்றியுள்ள பகுதிகளுக்கு கழகச் சம்பந்தமான தொடர்புகள் வைத்துக்கொண்டு கவனிக்க சில தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கல்லாவியில் தி. மு. கழகம் துவக்கம்

இவ்வூரில், தோழர் ஏ. துரைசாமிகவுண்டர் எம். எல். ஏ., அவர்கள் தலைமையில், தி. மு. கழகம் துவக்கப்பட்டது. கழக நோக்கங்களை விளக்கி தோழர்கள் மணி, சண்முகமணி பேசினர். பின்னர், தோழர்கள் அ. மு பன்னீர் செல்வன் செயலாளராகவும், ஏ. இராமானுசம் உதவி செயலாளராகவும், சாபு கோபாலகிருட்டிணன் பொருளாளராகவும், க. சு. மணி மாவட்டப் பிரதிநிதியாகவும், க. சு. வேலன், மு அழகேசன், கி. வெங்கடேசன், இரா. குஞ்செட்டி, செயராமன், சென்றுயன், இராசிக்கான், பி. டி. கிருட்டிணன், பி பாலகிருட்டிணன், கே. வி. பெருமாள், கே. ஆர். கிருட்டிணன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்

இராயநல்லூர், டிச. 11—

இராயநல்லூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் இன்று மாலை 5 மணிக்குதோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சிவநேசன், மூர்த்தி, வேலாயுததாசன், சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர்கள்.

ஜாதி வெறி பிடித்தவர்கள் யார் என்பதை நன்கு விளக்கி தோழர் எல். என். இராமலிங்கம் பேசினார். அடுத்து, தோழர் சி. பி. சிற்றரசு, புராணப்புளுகுகளை விளக்கியும், ஆரம்பக் கல்வித் திட்டத்திலுள்ள குற்றங் குறைகளையும், ஆச்சாரியாரின் ஆணவப் போக்கைக் கண்டித்தும், சொற்பொழிவாற்றினார். (ந. கி.)

கல்வி திட்டத்தை வாபஸ் பெறுக!

16—12—53ல், திருவைகுண்டத்தில் வக்கீல் ஒப். பெருமாள் நாடார் தலைமையில் நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா நாடார் சங்க வருடாந்தர மகாசபைக் கூட்டத்தில், ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்து, உடனடியாக திட்டத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை சென்னை அரசாங்கத்துக்கும், சில எம். எல். ஏ-க்களுக்கும் அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

பெயர் மாற்ற அறப்போர் தோழருக்குப் பாராட்டு

ஈரோடு, டிச. 18—

கல்லக்குடிப் போராட்டத்தில் தோழர் கண்ணதாசன் குழுவினருடன் சிறைசென்று மீண்ட தோழர் பகுத்தறிவு அவர்களுக்கு 16—12—53ல் வ. உ. சி. மாணவர் கழகத்தினரால் ஓர் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு தேனீர் விருந்தும், ஊர்வலமும் நடைபெற்றது. பின்னர், வ. உ. சி. மைதானத்தில் தோழர் கே. எஸ். பி. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தலைவர் உரைக்குப் பின், தோழர் எம். ரெங்கசாமி அவர்கள் விரிவுரையாற்றினார்.

மார்த்தாண்டன்பட்டி தி. மு. கழகம்

9—12—53ல், கே. வி. கே. சாமி வாசகசாலையில், தி. மு. கிளைக் கழகப் பொதுக்கூட்டம் தோழர் வயி. சின்னச்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் செல்லையா சொற்பொழிவாற்றினார். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் 11-வது வார்டு தி. மு. கழகத் துவக்கம்

13—12—53-ல், தோழர் கே. கோபால் கடையில், சேலம் 11-வது வார்டு தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் இ. ர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: கே. கோபால் செயலாளராகவும், கே. எஸ். முத்து துணைச் செயலாளராகவும், எம். சாமிக்கண்ணு பொருளாளராகவும், க. சுப்ரமணி, கே. கோபால் நகர கிளை பிரதிநிதிகளாகவும், கே. கோபால், கே. என் முத்து, ஆர். பாலாஜி, பி. எஸ். மாரியப்பா, எஸ். எ. கிட்டு, க. சுப்ரமணியம், மு. அங்கமுத்து, எம். பஷீர், என். ஆர். ராஜூ, ஆ. கண்ணன், எஸ். எம். கேசவன், கேசவன், எம். அர்த்தநாரி, எம். சாமிக்கண்ணு ஆகியோர் நிர்வாகிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொத்தனை கிராமத்தில் தி.மு.கழகத் துவக்கவிழா

போளூர் தாலுக்கா பொத்தனை கிராமத்தில், சிறப்பான முறையில், தி. மு கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் பரசுராமன் தலைமை வகித்தார். போளூர் தி. மு கழகத் தோழர்கள் அண்ணாமலை, எம். எ. ரகமான், எழிலன், சி. சின்னதம்பி, கி. ரத்னம், போளூர் சுப்ரமணியன் ஆகியோர் கழக நோக்கங்களையும், நாட்டு மக்களுக்குச் செய்து வரும் சேவைகளையும், விளக்கி, கழகத்தைத் துவக்கி வைத்தார்கள். கிராமத்தில் ஒலி பெருக்கி, லைட்டுகள் மற்றும் அலங்காரங்கள் சிறப்பாக அமைந்திருந்தன. அவ்வூர் தி. மு. கழகத் தோழர்களான பரசுராமன், கே சங்கரன், டி. சங்கு, பி. சின்னப்பா, பி. வேலாயுதம் உழைப்பே இதற்குக் காரணம். விழாவில் கலந்துகொண்டமைக்கு 50 பேர்களுக்கு தோழர் அப்பாவு அவர்கள் இல்லத்தில் உணவளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தி. மு. க.

இலங்கை, டிச. 15—

13—12—53ல் நடைபெற்ற அங்கத்தினர்கள் கூட்டத்தில், இனி தொடர்ந்து கூட்டங்கள் நடத்துவதுடன், யாழ்ப்பாணச் சுற்று வட்டாரங்களிலும் கிளைகள் நிறுவ முயலுவதென்றும் அத்தாக்குடி சதிவழக்கு நிதிக்கு ரூ 100 அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

மலையாண்டிபட்டினம் தி. மு. கழகம்

10—12—53ல், தோழர் ஆயமணி தலைமையில் பொதுக் கூட்டம் நடந்தது. அதுபோது, தோழியர்கள் பூங்கோதை; அருண்மொழி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குன்னூர் தி. மு. கழகம்

8—12—53ல், வாலிபர் முற்போக்கு மன்றத்தில், கோவை செழியன் தலைமையில் நடைபெற்ற பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் வி. கா. ஒளிபழகன் செயலாளராகவும், இரா. தமிழ்மணி துணைச் செயலாளராகவும், எம். ஏ. எரிப்பு பொருளாளராகவும், நிர்வாகக் குழுவிற்கு 12 தோழர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரூர் வட்ட தி.மு.கழகம்

15—12—53ல், தி மு கழகச் செயற் குழு கூட்டம் தோழர் ரு. ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். எஸ். ராமநாதன் கூட்டத்தின் நோக்கங்களைப்பற்றி விளக்கிப் பேசினார். வட்டக் குழு சார்பில், அத்தக்குடி நிதிக்கு ரூ 101 அளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கிளண்டேல் தி.மு. கழகத் துவக்கம்

குன்னூர், டிச. 18—

12—12—53-ல், குன்னூரை அடுத்துள்ள கிளண்டேல் தேயிலைத் தோட்டத்தில் உள்ள தோழர் முத்துசாமி இல்லத்தில், தோழர் ஒளிபழகன் தலைமையில் தி. மு. கழகம் நிறுவப்பட்டது. அதுபோது, தோழர்கள் செல்லப்பன் செயலாளராகவும், முத்துசாமி துணை செயலாளராகவும், சுந்தரம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் ஒளியழகன் கழகக் கொள்கைகளை விளக்கி விரிவுரையாற்றினார்.

ராயநல்லூரில் தி. மு. கழக துவக்க விழா பொதுக் கூட்டம்

11—12—53ல், தி. மு. கழக துவக்க விழாப் பொதுக் கூட்டம் தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது. கழகக் கொடியை, தோழர் சிவநேசன் ஏற்றிவைத்து, சொற்பொழிவாற்றினார். தோழர்கள், சி. பி. சிற்றரசு, டி. கே. மூர்த்தி, வேலாயுததாசன், ந. ராமலிங்கம், பி.சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர்.

சேலம் 14-வது வார்டு தி. மு. கழகம்

16—12—53-ல், தோழர் கு. நடராசன் இல்லத்தில், தோழர் சிற்றுளி-சுப்ரமணியம் தலைமையில், தி மு கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் : எஸ். அர்ஜுனன் செயலாளராகவும், ஆர் பழனியப்பன் துணைச் செயலாளராகவும், கு. நடராசன் பொருளாளராகவும், மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நகரக் கிளை உறுப்பினர்களாகத் தோழர்கள்: கே. பி. வடிவேல், கு. நடராசன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிளைக் கழகத் துவக்கு விழாவை, தோழர்கள்: இ. வி. கே. சம்பத், ப. உ. சண்முகம், தோழியர் அருண்மொழி ஆகியோரைக் கொண்டு ஜனவரி முதல் வாரத்தில் நடத்தமுடிவு செய்யப்பட்டது.

பொரல்ல தி. மு. கழகம்

இலங்கை, டிச. 18—

6—12—53ல், 3-வது டிவிஷன் மருதானை திரு. வி. க. திடலில், தோழர் எம். எஸ். குலசேகரன் தலைமையில், தோழர்கள் டி. எம். பீர்முகம்மது, பி. காத்தமுத்து இளஞ்செழியன், மார்சல் குணவர்தன, மா. சே. அருள், எ. எஸ். மணவைத் தம்பி, வி. எஸ். சி. அமீது ஆகியோர், ‘அத்தக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்குக’ என்று கோரி, சொற்பொழிவாற்றினர்.

மணக்கால் தி. மு. கழகம்

15—12—53-ல், நடைபெற்ற தி. மு. கழக கமிட்டிக் கூட்டம் தோழர் ம. ஆ. மணக்கி இல்லத்தில் நடந்தேறியது. அதுபோது, அத்தக்குடி வழக்கு நிதிக்கும், தலைவர்கள் வரவேற்புக்கும் பணம் ஒதுக்கியும், தை திருநாளை சிறப்பாகக் கொண்டாடவும் முடிவு செய்யப்பட்டது.

கொடுங்கையூர் தி. மு. க.

13—12—53 ஞாயிறு காலை சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், இவ்வூர் தி மு. கழகச் செயற் குழு தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் எம். ராசன் செயலாளராகவும், இர. இன்பராசன் துணைச் செயலாளராகவும், ஜி. ரங்கநாதன் பொருளாளராகவும், அ. நெடுமாறன், வெ. ராகவன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

13—12—53-ல், தோழர் பி. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கமலநாதன் தாயார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், அறப் போரில் கைதாகி விடுதலையான கழகத் தலைவர்களைப் பாராட்டியும், பம்பாய் மாவட்டக் குழு அமைப்பதற்கு கிளைக் கழகப் பிரதிநிதிகளின் கூட்டத்தை 20-12-53ல், தாராவி கழகப் பணி மனையில் நடத்துவதெனவும், பத்தாண்டிற்கு நிர்வாகிகளை 25-12-53ல், தேர்ந்தெடுப்பதெனவும், அத்தேர்தலுக்கு அதிகாரியாக தோழர் எல். என். செழியன் அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாங்குளம் தி. மு. கழக செயற்குழு கூட்டம்

15—12—53-ல், தி. மு. கழக செயற்குழு கூட்டம், தோழர் ரா. பெரியவீரணன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், தோழர்கள் : சாரசுதீன் செயலாளராகவும், அ.பெ. அயோத்தி துணைச் செயலாளராகவும், மு. கா. பெரியாழ பொன்னன் பொருளாளராகவும், வீ. வீ. பழனிச்சாமி, ப. திருப்பதி மாவட்டப் பிரதிநிதிகளாகவும், மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

லால்குடி தி. மு. கழகம்

13—12—53-ல், இவ்வூர் தி. மு கழக அமைப்புக் கூட்டம், தோழர் பி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, எல். என். பரமசிவம் செயலாளராகவும், சி. ரெத்தினம், லா. து. கந்தசாமி துணைச் செயலாளர்களாகவும், எல். எம். தங்கராசு பொருளாளராகவும், பி. வி. பாலசுப்பிரமணியன் மாவட்டப் பிரதிநிதியாகவும், சந்தானகிருட்டிணன் விளம்பர உறுப்பினராகவும், மற்றும் 7 பேர் நிர்வாகிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜனவரி முதல் வாரத்தில், கல்லக்குடி போராட்டத்தில் உயிர்நீத்த தோழர் லால்குடி நடராசன் உருவப் படத்தைத் திறந்துவைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

தொட்டியம் தி.மு. கழகம்

11—12—53ல், நடைபெற்ற தி. மு. கழகக் கிளை உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் எல். வீரசாமி செயலாளராகவும், மருதநாயகம் துணைச் செயலாளராகவும், ம. அ கணேசன் பொருளாளராகவும், ம கிருட்டிணன், பாலகிருட்டிணன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், கந்தசாமி, டைலர் சுப்ரமணியம், தம்பிதுரை, ஜனார்த்தனம், ந. முத்து, எம், பாலன், கோவிந்தன், ந. நடேசன் ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தொ. கோட்டாம்பட்டி பொதுக் கூட்டம்

15—12—53ல், தொட்டிய கொட்டாம்பட்டி தி. மு கழகச் சார்பில், தோழர் வ. சி. சிவராமன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். நெடுமாறன், க அரைக்கண்ணன், உடுமலை நாராயணன் ஆகியோர் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (18, ஜூலிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இ. வி. க. சம்பத்.